**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், பதிவசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பல்கலைக்கழகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடனான தொடர்புற்ற இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடை முறையல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 867,706,599 கிரயமான 13 சொத்து விடயங்கள் மேலும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டன. அதன் பிரகாரம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது காணிகள் மற்றம் கட்டிடங்களின் மீள் மதிப்பீட்டுச் செயற்பாடு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய அனைத்து அசையாத நிலையான சொத்துக்கள் 2022 பொருள் மெய்மையாய்வுடன் இணைந்ததாக தேவையான பௌதீக மெய்மையாய்வு செய்து ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் உள்ளக தொடர்பு மென்பொருள் முறைமை (ERP System) இற்காக 2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 5,250,000 ஆன முதலாவது தவணை நடைமுறை வேலைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் முற்பணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தற்போது இருப்பு முகாமைத்துவ மொடியுல், பொது பேரேட்டு மொடியுல் ஆகிய இரண்டும் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் அம்மொடியுல்களைப் பொறுப்பேற்ற பின்னர் அத்தொகையை நடைமுறை வேலைக் கணக்கிற்கு மாற்றுவதாக | மென்பொருளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 5,250,000 ஆன முதலாவது தவணை நடைமுறை வேலைகளின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தினால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,025,396,975 தொகை செலவிடப்பட்டு அனுராதபுரம் போதனா வைத்தியசாலை காணியில் நிர்மாணிக்கப்பட்ட சிகிச்சை கட்டிடம் மற்றும் பாதுகாப்பு கூடத்திற்காக 2015 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்படாமை காரணமாக கட்டிடங்களின் பெறுமதி ரூபா 365,735,755 ஆலும் பொது ஒதுக்கம் ரூபா 314,465,906 ஆலும் கூடுதலாகவும் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 51,269,848 ஆலும் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக பணத்தினால் நிர்மாணிக்கப்பட்ட காணியின் கையளிப்பு நடவடிக்கைகள் முறையாக இடம்பெறுவதால் இது பல்கலைக்கழக ஆதனம் ஒன்றாக கருதி பெறுமான தேய்வு செய்வதற்கு இயலுமை இல்லையென்பதாக | பல்கலைக்கழகத்தின் சொத்துக்களை சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் போது யானை பாதுகாப்பு பிரிவிற்கு நன்கொடையாக கிடைத்த கட்டிடங்கள் உட்பட அலுவலக உபகரணங்கள் மற்றும் 142 தளபாட உபகரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிப்பதற்கு முன்னர் இனங்கானப்பட்டு மீள் மதிப்பீடு செய்து 2023 ஆம் ஆண்டு முதல் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நன்கொடையாக கிடைத்த கட்டிடம் உட்பட அலுவலக உபகரணங்கள் மதிப்பேறு செய்து கணக்கீடு செய்யப்பட |
| (ஈ) | 2019 நவம்பர் மாதத்தில் வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட ரூபா 12,166,249 கிரயமான திண்மக் கழிவு பிரிவு கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த இயந்திரங்களின் பெறுமதி கட்டிடத்தின் பெறுமதியும் வேறாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மானியமொன்றின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட இந்த Solid Waste mgt கட்டிடம் ஒன்றாக இருப்பதால் கட்டிடங்களின் கீழ் வகைப்படுத்தியுள்ளதாக | கட்டிடத்தின் பெறுமதி மற்றும் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களின் பெறுமதி சரியாக வெவ்வேறாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பல்கலைக்கழகத்தில் 05 களஞ்சியங்களில் காணப்பட்ட ரூபா 6,055,399 பெறுமதியான காலாவதியான இருப்புகள் நடைமுறை சொத்தாக இறுதி இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் இறுதி இருப்பு அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இப்பொருட்கள் தொடர்பாக மீண்டும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி உள்ளவராக பயன்படுத்துவதற்கு எடுக்கக் கூடிய பொருட்கள் மற்றும் மேலும் எவ்வித நியாயமான காரணங்களின் பேரில் பயன்படுத்தப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை 2023 கணக்குகள் ஊடாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இறுதி இருப்பின் சரியான பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஊ) | மீளாய்வாண்டின் விடுதி வருமானம் ரூபா 4,671,650 ஆக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் விடுதி வருமானமாக ஆண்டில் பணமாக கிடைத்த வருமானமான ரூபா 2,172,088 மாத்திரம் காண்பிக்கப்பட்ட மையால் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,499,562 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது | மாணவர் விடுதி வருமானம் முறையாக அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பதற்கு 2023 ஆம் ஆண்டிலிருந்து தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக | அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (எ) | விவசாய பீட பண்ணையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 1,434 தேங்காய்கள் மற்றும் 8,217 கி.கிராம் நெல் பெறுமதியிடப்பட்டு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | முறையாக பரீட்சிக்கப்பட்டு குறித்த இருப்புக்களை 2023 ஆம் ஆண்டின் போது இருப்பிற்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஆண்டின் இறுதி இருப்பு சரியாக பெறுமதியிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.5.4 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| வேலை ஆரம்பிப்பு முற்பணம் | 171,558,694 | 181,407,650 | 9,848,956 | நிதி நிலைமை கூற்றில் வேலைத்தள ஆரம்பிப்பு முற்பணம் ரூபா 171,558,694 என குறிப்பிடப் பட்டிருந்ததுடன் அட்டவணையிலும் அப்பெறுமதி குறிப்பிடப் பட்டுள்ளதாக | மேற்படி கூற்றுக்கள் மற்றும் அண்மித்து அறிக்கைகளின் பிரகாரம் பெருமதி ஒப்பீடு செய்யப்பட வேண்டும் |

## 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| i | XIX ஆம் அத்தியாயத்தின் 5.2 ஆம் பந்தி | பட்டியலிடப்பட்ட வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துள்ள உத்தியோ கத்தரிடம் இருந்து வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டிய முறை தொடர்பாக பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் இல்லாத போது தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளை மிகைத்து செல்லாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தினால் நியமிக்கப்பட்ட வீட்டு குழுவின் இணக்கப்பாட்டின் பேரில் வீட்டு வாடகையாக மாதாந்தம் ரூபா 400 முதல் ரூபா 1500 வரையான வீச்சில் 180 உத்தியோகத்தர் களிடமிருந்து வீட்டு வாடகை அறவிடப்பட்டு இருந்தது. | ரஜரட்ட பல்கலைக்கழகம் மிகவும் பின்தங்கிய பிரதேசம் ஒன்றில் அமைந்துள்ளதால் அரசின் உத்தியோகபூர்வ வீடுகளில் மிகவும் குறைந்த வசதிகள் உள்ளதால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடமிருந்து விசாரணை மேற் கொள்ளப்பட்டது பூகோள ரீதியில் அமைவிடம் மற்றும் கஷ்டங்களைக் கருத்தில் கொண்டு பல்கலைக்கழக வீட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டு வீட்டு வாடகையை தயாரிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்ததாக அதன் பிரகாரம் பல்கலைக்கழக பேரவையினால் நியமிக்கப்பட்ட வீட்டு குழுவினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகை வீடுகளைப் பெற்றுக்கொண்டோரின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் கழித்துக் கொள்வதாக | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii | XIX ஆம் அத்தியாயத்தின் 5.3 ஆம் பந்தி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தாபன சுற்றறிக்கை இலக்கம் 09/2019 | பட்டியலிப்பட்ட வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துள்ள உத்தியோகத்தர் களின் அடிப்படை சம்பளத்தில் 10 சதவீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும் உபவேந்தர் உத்தியோகபூர்வ விடுதி வழங்குவதற்காக உத்தியோகத்தரிடமிருந்து எவ்வித வாடகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்தோடு இவ்வீட்டிற்காக நீர் மற்றும் மின்சார பட்டியலுக்காக ரூபா 197,335 பல்கலைக்கழகத்தால் செலவிடப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்தால் கடந்த சில ஆண்டு களாக நியமிக்கப்பட்ட உப வேந்தர்களுக்காக உத்தியோகபூர்வ விடுதி வழங்கப்பட்டிருந்தது 2022 ஆம் ஆண்டிலிருந்து நிதி குழு அங்கீகாரத்தின் பெயரில் மாதாந்தம் நீர் மற்றும் மின்பட்டியலின் பெறுமதியின் 10 சதவீத தொகை சம்பளத்திலிருந்து கழித்து கொள்வதாக | தாபன விதி கோவை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 9.1 ஆம் பந்தியின் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2) (ஆ) பிரிவு | திறைசேரியின் முன்அங்கீகாரம் இன்றி கட்டுநிதி வழங்கக்கூடிய ரூபா 100,000 எல்லையை மிகைத்து 02 சந்தர்ப்பங்களில் 202,000 மற்றும் ரூபா 961,620 ஆன முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | தேவைப்பாட்டின் பேரில் மேற்பார்வையாளர் உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்கப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணங்களை ின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி | கல்விசார் பதவியணியின் வருகை மற்றும் வெளிச் செல்லல் உறுதி செய்யப்படாமல் மீளாய்வாண்டிற்காக ரூபா 1,324,297,724 சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக | பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,452,634 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,552,761 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 15,005,395 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் இவ்வீழ்ச்சிக்கு வெளிவாரி பாடநெறி வருமானம் குறைவடைந்தமை, வழங்கல் மற்றும் உடன்படிக்கை சேவைச் செலவினம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மிஹிந்தலை வளவில் 04 இரட்டை ஊழியர் உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பான ரூபா 52,703,236 இற்குரிய ஒப்பந்தம் 2016 திசெம்பர் 23 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக தொடங்கல் முற்பணமாக ரூபா 15,859,979 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 10,620,619 ஆக காணப்பட்ட போதும் நிர்ணயிக்கப்பட்ட படி வேலைகள் நிறைவேற்றப்படாமை காரணமாக பல்கலைக்கழகத்தினால் 2019 பெப்ரவரி 20 ஆந் திகதி உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது. அத்திகதியில் ரூபா 15,760,611 தொகை மேலும் ஒப்பந்தக்காரரிடமிருந்து பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 3,952,742 தொகையான முற்பண பிணைபொறுப்பு மற்றும் ரூபா 10,540,647 ஆன | ஒப்பந்த பெறுகை தந்திரோபாயங்களின் பிரகாரம் முடிவுறுத்தப்பட்டு வேறு தரப்பினருக்கு வழங்குவதற்கு இயலுமை / தேவையொன்று பல்கலைக்கழகத்திற்கு இல்லாமல் இருந்ததுடன் இச்செயற்திட்டம் 2018 ஆகஸ்ட் ஒப்பந்தக்காரருக்கு இருந்த நிதிச்சிக்கல் காரணமாக கைவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | ஒப்பந்தம் இடைநடுவில் நிறுத்தப்பட்டதன் காரணமாக அரசிற்கு ஏற்பட்ட நட்டம், முற்பணம் மற்றும் செயலாற்றல் பாதுகாப்பு காலாவதியாவதற்கு முன்னர் பணமாக மாற்றாமல் இருந்தவர்கள் இனங்காணப்பட்டு அவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாற்றல் பிணை என்பன காலாவதியாவதற்கு முன்னர் காசாக்குவதற்கு இயலுமை இருக்கையில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் பல்கலைக்கழகத்திற்கு ரூ’பா 15,760,611 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | முகாமைத்துவ கல்வி பீடத்திற்கு காற்று சீராக்கி முறைமை ஒன்றை நிறுவுவதற்காக ரூபா 6,211,226 ஆன ஒப்பந்த பெறுமதியுடன் கூடிய தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கும் வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தத்தின் அளிப்பு கடிதம் 2 மாதங்களுக்கு அனுமதித்த கால தாமதத்துடன் அனுப்பியதன் காரணமாக ஒப்பந்தக்காரால் அதனை பொறுப்பேற்றல் நிராகரிக்கப்பட்டிருந்தது. அதுவரை கேள்வி பாதுகாப்பு காலாவதியாக இருந்ததால் அதனைப் பணமாக்குவதற்கான இயலுமை தவிர்க்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கணக்காய்வு திகதியான 2023 மே 31 ஆம் திகதி வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021.08.18 ஆந் திகதி நடைபெற்ற பெறுகை கூட்டத்தின் போது வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு இருந்ததுடன் நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று காரணமாக 2021.10.03 ஆந் திகதி வழங்கல் கடிதம் உரிய ஒப்பந்த கம்பெனிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமற்று இருந்ததால் குறித்த நிறுவனம் இப்பெறுகை செயற்பாட்டை நிராகரித்து இருந்தது. கேள்வி பாதுகாப்பு 2021.08.25 ஆந் திகதி காலாவதியாக இருந்தது | முகாமைவத்தினால் கேள்வி பாதுகாப்பினை பெற்றுக் கொண்டவுடன் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 பெப்ரவரி 15 ஆந் திகதியின் பின்னர் யானை பாதுகாப்பு பிரிவு எந்தவொரு கல்வி நடவடிக்கைக்காகவும் பயன்படுத்தப்படாமல் மூன்று ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக விளைவற்று காணப்பட்டதுடன் இந்த பிரிவின் திருத்த வேலைகளுக்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 1,220,764 ஆன செலவின மொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2023 பெப்ரவரி மாதம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களின் பங்குபற்றலுடன் வனசீவராசிகள் தொடர்பான ஆராய்ச்சிகள் ஆரம்ப ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். இதற்கு மேலதிகமாக உயிரியல் விஞ்ஞான கல்வித்துறையின் கல்வி நடவடிக்கைகளும் பிரிவில் மேற்கொள்ளப்படுவதாக | செயற்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் அப்பிரிவின் வளங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உடன்படிக்கை தொகையான ரூபா 42,979,355 ஆன மருத்துவ பீடத்தின் 03 இரட்டை உத்தியோக இல்லங்கள் திட்டமிடப்பட்டு நிர்மாணச் செயற்திட்டம் 2017 மே 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு பல சந்தர்ப்பங்களில் காலம் நீடிக்கப்பட்டதன் பின்னர் 2019 | இச்செயற்திட்ட ஒப்பந்தக்காரரிடம் காணப்பட்ட நிதிச் சிக்கல் காரணமாக உரிய திகதிகளில் பூர்த்தி செய்வதற்கு முடியாத இருந்தது. இதனால் தண்டப்பணமாக திரவ நிலை சேதமாக ரூபா 4,297,935 தொகை ஒப்பந்த உடன்படிக்கை | முற்பண பாதுகாப்பு மற்றும் செயலாற்றல் பிணையை காலாவதியாவதற்கு முன்னர் பணமாக்குவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ஏப்ரல் 19 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தது. எனினும் ரூபா 29,239,233 ஆன வேலை பெறுமதியின் பின்னர் ஒப்பந்தக்காரர் நிர்மாணத்தை கைவிட்டிருந்ததுடன் அதுவரை ஒப்பந்தக்காரருக்கு ரூபா 21,798,120 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தக்காரருக்குரிய ரூபா 2,148,967 செயலாற்றல் பாதுகாப்பு மற்றும் ரூபா 9,885,251 ஆன முற்பண பாதுகாப்பு என்பன முறையே 2020 ஜனவரி 08 ஆந் திகதி மற்றும் 2019 ஜுலை 30 ஆந் திகதிகளில் காலாவதியாகி இருந்ததால் அப்பாதுகாப்பு பிணை மூலம் அரசிற்கு அறவிடப்பட வேண்டியிருந்த பணத்தை அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது. | பிரகாரம் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது ஒப்பந்தக்காரரால் குறித்த பிணைகளின் காலத்தை நீடித்து பல்கலைக்கழத்திற்கு வழங்குவதற்கு இனங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது செய்யப்பட்டுள்ள வேலைகளின் பெறுமதி ரூபா 3,946,442 ஆக இருந்ததுடன் ரூபா 2,148,967 ஆன நிறுத்திவைத்தல் தொகையும் ரூபா 4,297,935 ஆன திரவங்கள் சேதமும் ரூபா 8,595,871 ஆன முற்பணத் தொகையும் அறவிடப்பட்டதன் பின்னர் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 92,096.38 தொகை கொடுப்பனவு செய்வதற்கு உள்ளதாக | எடுத்தல் வேண்டும் |
| (இ) | மருத்துவ பீடத்தின் நூலகத்தின் பாவனைக்காக 2011,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட 194 புத்தகங்களுக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 2,383,594 ஆன (US $ 12308) தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரையில் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை இக்காலப் பகுதியில் இடம்பெற்ற அந்நிய செலாவணி விகிதம் அதிகரித்ததன் பேரில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 584,983 தொகை மேலதிகமாக செலவிடுவதற்கு நேர்ந்நிதிருந்தது. | பல்கலைக்கழகத்தால் இவ்விடயம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | கடன் கொடுத்தோரை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்த வேண்டும் |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்திற்காக உள்ளகத்தொடர்பு முகாமைத்துவ மென்பொருள் முறைமை ஒன்று நிறுவுவதற்காக 2020 திசெம்பர் 31 ஒப்பந்த பெருமையான ரூபா 17,500,000 இற்கு உடன்படிக்கை செய்யப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்து கையளிக்க வேண்டிய போதிலும் கணக்காய்வு சந்தர்ப்பமாக 2023 மே 31 ஆந் திகதி வரையிலும் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 9 மொடியுல்களுடன் செயற்படும் ஒன்றாக இருந்ததுடன் இதுவரை மிகவும் 03 சிக்கலான முறைமைகள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. அவ்வாறே மற்றைய மொடியுல்களில் 50% இற்கு மேற்பட்ட நிலைமையில் அபிவிருத்தி செய்யப்பட்டு உள்ளதாக | உள்ளகத் தொடர்பு மென்பொருள் முறைமையின் வடிவமைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் விரைவில் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை அதனுடன் இணைப்பான கைநூலின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல் 2023 ஏப்ரல் 06 ஆந் திகதி வரை தாமதிக்க்பபட்டிருந்தது. | இத்தாமதத்திற்கு நிதிப் பிரிவில் காணப்படும் நிதி உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாகும் | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் அவ்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |